From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No.92/16

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Deepa | Father/Husband Name: Karupaiah | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | :19.01.18. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2018.

**முதல் விசாரணை: (அரசு தரப்பில்)**

நான் தற்போது புதுதாமரைப்பட்டியில் எனது தகப்பனார் வீட்டில் குடியிருந்து வருகிறேன். கடந்த 15.07.2002ம் ஆண்டு எனக்கும் பொன்னுச்சாமி என்பவர் மகன் கருப்பையா என்பவருக்கு தல்லாகுளம் பெருமாள் கோவிலில் வைத்து பெரியவர்கள் மற்றும் உறவினர்கள் முன்னிலையில திருமணம் நடந்தது. திருமணத்திற்கு எனது தகப்பனார் 30 பவுன் நகைகள், மற்றும் ரூபாய் 6 லட்சத்திற்கு சீர்வரிசை பொருட்கள் கொடுத்தார்கள். திருமணம் முடிந்து நாங்கள் சிட்டம்பட்டியில் உள்ள எனது கணவர் வீட்டில் குடியிருந்து வந்தோம். எனது கணவர் வீட்டில் எனது மாமனார் பொன்னுச்சாமி, எனது மாமியார் சிலோச்சனா, மச்சான் மயில்வாகனன், கண்ணன், மற்றும் மயில் வாகனன் மனைவி சங்கீதா, மற்றும் கண்ணன் மனைவி செல்வராணி ஆகியோர் கூட்டு குடும்பமாக வாழ்ந்து வந்தோம். கணவன் மனைவியாக வாழ்ந்து வந்ததில் கடந்த 08.05.2003-ல் எனக்கு பெண் குழந்தை பிறந்தது. எனக்கும் எனது கணவர் குடும்பத்தினருக்கும் சிறு சிறு சண்டை இருந்து வந்தது. எனது மாமனார் மற்றும் மாமியார் எனது பெற்றோர் வீட்டிலிருந்து பணம் மற்றும் நகை வாங்கி வர சொல்வார்கள். எனது நாத்தனார் தேவி என்பவர் எனது மாமனார், மாமியார், கணவரிடன் என்னை பற்றி அடிக்கடி குறை சொல்லி பிரச்சனை செய்து வந்தார். அவர்கள் பணம் கேட்டு நான் கொடுக்கவில்லை. என்னை எனது அம்மா வீட்டிற்கு

எதிரிகள் அனைவரும் என்னை அடித்து அனுப்பிவைத்தார்கள். மேற்படி சம்பவம் எனது மாமியார் இறந்த சமயத்தில் நடந்தது. எனது கணவர் கையால்முதுகில் அடித்தார். அப்போது எனது மூத்த மச்சான் மயில் வாகனன் வீட்டில் இருக்ககூடாது என்னை அடிக்க கையை ஓங்கி வந்தார். வீட்டை விட்டு விரட்டி விட்டார்கள். பின்னர் இது சம்மந்தமாக எனது பெற்றோரிடம் சொன்னேன். இதுதொடர்பாக எனது உறவினர்கள் கணவர் வீட்டிற்கு சமாதானம் பேச வந்தோம். அவர்கள் எங்களை வீட்டிற்குள் உள்ளே விடவில்லை. என்னையும், எனது பெற்றோரையும் வீட்டிற்குள் அனுமதிக்கவில்லை. எதிரிகள் நகை வேண்டும், பணம் வேண்டும் என்று அடிக்கடி சண்டை போட்டார்கள். நான் 2013 வருடத்திலிருந்து எனது வீட்டில்தான் இருந்துவருகிறேன். எனக்கு போட்ட நகைகள் எனது கணவர் வீட்டார்தான் வைத்திருந்தார்கள். எனக்கு எதுவும் தரவில்லை. நான் வீட்டை விட்டு கட்டின சேலையுடன் தான் வந்தேன். இது தொடர்பாக நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். போலீசார் வழக்கு சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க முதல் விசாரணை வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**